1996 ஆகஸ்ட் 6]

3. தகவல் கோரல்

(அ) அறந்தாங்கித் தொகுதி மீனவர்வாழ் ஜெகதாப்பட்டினம் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து குறித்தும் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குவது குறித்தும்

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி எண் 56-ன் கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து உள்ளேன். என்னுடைய தொகுதியில் அறந்தாங்கியில் ஜெகதாப்பட்டினம் என்கின்ற மீனவர்கள் வாழ்கின்ற ஒரு கிராமத்தில் நேற்று திடீரெனத் தீப்பற்றிக் கொண்டதால் ஏறக்குறைய 1,500 மீனவ வீடுகள் தீப்பற்றி எரிந்து அதனால் பல இலட்ச ரூபாய் பொருள் இழப்பும், பெரும் நஷ்டமும் மீனவர்கள் பயன்படுத்தக்கூடிய வலை போன்ற அத்தியாவசியப் பொருள்கள் அழிவும் ஏற்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற மீனவக் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கிட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தின் வாயிலாக நான் வற்புறுத்தி கேட்டுக்கொள்கின்றேன். அதே இடத்திலே 3 முறை அதாவது ஒரு வருடத்திற்குள்ளாகவே 2, 3 முறை தீப்பிடித்து எரிந்துவிட்டது. எனவே மீண்டும் தீப்பிடிக்காத விதத்திலே தீப்பிடிக்காத கூரைகள் கொண்ட வீடுகள் கட்டித் தருவதற்கும்-மீனவ தொழிலாளிகள்தான் அங்கே அதிகமாக இருக்கிறார்கள்--அரசு மானியமாக ஒரு தொகையும் அல்லது அதோடு சேர்த்து கடனாகக்கூட ஒரு தொகையுமாக சேர்த்துக் கொடுத்து, நிரந்தரமாகத் தீப்பிடிக்காத விதத்திலே வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன். அதற்கும் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு இன்னொரு கவன ஈர்ப்பு வந்தபோது, பாம் பிளாஸ்ட், குண்டு வெடித்தபோது நான் சொன்னேன். அதற்குப் பிறகு நான் மருத்துவமனையிலே எல்லாம் போய்ப் பார்த்தேன். அரசுத் தலைமைக் கொறடா அவர்கள் கூட வந்து பார்த்தார். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நான் கேட்டபோது நீங்கள் கேள்வி கேட்டீர்கள், முதலமைச்சர் பதில் சொன்னார், அந்த அளவோடுதான் இருக்கிறது. டி.வி.யிலே செய்தி பார்த்தேனே தவிர என்ன நிவாரணம்

வழங்குவது என்று இன்னும் ஒன்றும் முடிவாகவில்லை, எங்களுக்கு ஒன்றும் செய்தி வரவில்லை என்று சொன்னார். ஏறக்குறைய 25 பேர், 26 பேர் பெண்கள் குழந்தைகள் உட்பட தீக்காயங்களால் அதிகமாகப் பாதிக்கப்பட்டு புதுக்கோட்டை மருத்துவமனை, அறந்தாங்கி மருத்துவமனையிலே படுத்திருந்தார்கள். நான் போய் என்னால் முடிந்த அளவுக்கு 1,000, 500, 400, 300 என்று சொல்லி ஏதோ என்னாலே முடிந்த அளவு 10,000 ரூபாய்க்கு உதவி செய்துவிட்டு வந்தேன். ஆனால், முதலமைச்சர் அறிவித்த நிவாரணங்கள் அங்குபோய்ச் சேரவில்லை. உடனடியாக அதற்கும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும். பொதுவாக சட்டப்பேரவையிலே முதலமைச்சர் சொல்லிவிட்டால் அந்தத் துறையினுடைய அதிகாரிகள் அங்கு உடனடியாக வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டமன்றத்தில் சொன்னாலும் அது வாக்குறுதிதான். முதலமைச்சரே சொன்ன பிறகு திரும்ப ஒரு ஸ்பெஷல் ஆர்டர் அதற்குத் தேவையில்லை என்று கருதுகிறோம். எனவே சீப் செக்ரட்டரியோ, சம்பந்தப்பட்ட செயலாளர் அவர்களோ உடனடியாக முதலமைச்சர் உத்தரவாதம் தந்தவுடனே அந்தத் துறையினுடைய அதிகாரிகளோ, மாவட்ட ஆட்சித் தலைவரோ உடனடியாக இதை வைத்தே ஆணை பிறப்பிக்கலாம். அதற்காகக் காத்திருப்பது நல்லது அல்ல என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பதை வற்புறுத்துகின்ற நேரத்திலே அந்தப் பகுதியிலே பதட்ட நிலை நிலவுகின்ற காரணத்தினாலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை வற்புறுத்துகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நிவாரணம் வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு இங்கே எழுப்பியுள்ள இந்த இரண்டு பிரச்சினைகளைப் பற்றியும் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே தொடர்புகொண்டு ஆவன செய்யப்படும் என்ற உறுதியை வழங்குகின்றேன். (குறுக்கீடு)